# PAPER-III
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________________
   (Name) ____________________________
2. (Signature) ____________________________
   (Name) ____________________________

OMR Sheet No. : ..............................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.____________________________________
(In words)

| J | 2 | 6 | 1 | 3 |
|---|---|---|---|---|

Time : **$2\,{}^{1}/_{2}$** hours] [Maximum Marks : **150**

Number of Pages in this Booklet : **20** Number of Questions in this Booklet : **75**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of seventy five multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal / polythene bag on the booklet. Do not accept a booklet without sticker-seal / without polythene bag and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** Ⓐ Ⓑ ● Ⓓ
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, you will render yourself liable to disqualification.
9. You have to return the original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are however, allowed to carry duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचहत्तर बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील / पोलिथीन बैग को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील / बिना पोलिथीन बैग की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण** : Ⓐ Ⓑ ● Ⓓ जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई अंक काटे नहीं जाएँगे ।**

**TAMIL**
**தமிழ்**
**Paper-III**
**தாள் - III**

**Note :** This paper contains **seventy five (75)** objective type questions of **two (2)** marks each. **All** questions are compulsory.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் எழுபத்தைந்து (75) விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு (2) மதிப்பெண்கள் உண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

**1.** பாயிரத்தின் வேறு பெயர்
(A) கருத்துரை (B) பொழிப்புரை
(C) முடிவுரை (D) தந்துரை

**2.** உத்திகளின் எண்ணிக்கை
(A) எண்ணான்கு (B) மூவேழ
(C) ஈரைந்து (D) அறுபத்து நான்கு

**3.** தலைமாணாக்கர்
(A) அஞ்சுகம் போல்வார் (B) ஆப் போல்வார்
(C) இல்லிக்குடம் போல்வார் (D) நெய்யரி போல்வார்

**4.** ஆசு என்பது எதுகையிடையில் வரும் எழுத்துக்களான
(A) ய்,ர்,ல்,ழ் (B) ய்,ர்,ல்,ள்
(C) ய்,ர்,ழ்,ள் (D) ய்,ர்,ல்,ன்

**5.** பத்துப்பாட்டுள் அடி அளவால் பெரியது
(A) பட்டினப்பாலை (B) குறிஞ்சிப் பாட்டு
(C) மலைபடுகடாம் (D) மதுரைக் காஞ்சி

**6.** 'வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்' எனும் அடி இடம் பெறும் நூல்
(A) நெடுநெல்வாடை (B) முல்லைப்பாட்டு
(C) பொருநராற்றுப்படை (D) சிறுபாணாற்றுப்படை

**7.** பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே - இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல்
(A) கலித்தொகை (B) நறுந்தொகை
(C) பெருந்தொகை (D) குறுந்தொகை

8. கொண்டல் என்பது
(A) மேற்றிசைக் காற்று (B) தென்திசைக் காற்று
(C) வடதிசைக் காற்று (D) கீழ்த்திசைக் காற்று

9. 'தத்தம் கருமமே கட்டளைக்கல்' என்பதில் கட்டளைக் கல்லின் பொருள்
(A) அடைகல் (B) உரைகல்
(C) தடைக்கல் (D) பட்டைக்கல்

10. பதினெண்கீழ்க்கணக்கில் 'அகம்' பற்றிய நூல்கள்
(A) *6* (B) *9*
(C) *8* (D) *7*

11. 'அறமெனப்படுவது ... உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்லை' எனக்கூறும் காப்பியம்
(A) சிலப்பதிகாரம் (B) மணிமேகலை
(C) சீவகசிந்தாமணி (D) பெருங்கதை

12. பௌத்த சமயக் காப்பியம்
(A) நீலகேசி (B) குண்டலகேசி
(C) வளையாபதி (D) நாககுமார காவியம்

13. இரட்டை மணிமாலையில் இடம் பெறும் பாவகைகள்
(A) வெண்பா,கட்டளைக் கலித்துறை
(B) வெண்பா, வஞ்சிப்பா
(C) வெண்பா, விருத்தம்
(D) வெண்பா, அகவல்

14. திருவாய்மொழிக்கு அமைந்த ஈடு
(A) *6000* படி (B) *12000* படி
(C) *36000* படி (D) *9000* படி

15. வினைச் சொல் என்பது
(I) செயலைக் குறிப்பது
(II) காலமொடு தோன்றுவது
(III) வேற்றுமை கொள்வது
(IV) இரு திணைக்கும் உரியது
இவற்றுள்
(A) அனைத்தும் சரி (B) அனைத்தும் தவறு
(C) I, III,IV சரி (D) I, II, IV சரி

16. நூற்பா என்பது

(I) ஆடி நிழலின் அறியத் தோன்றுவது

(II) நாடுதலின்றிப் பொருள் நனி விளங்குவது

(III) யாப்பினுள் தோன்ற யாத்து அமைப்பது

(IV) ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது

இவற்றுள்

(A) I, II, III சரி (B) I, II, IV சரி

(C) அனைத்தும் சரி (D) அனைத்தும் தவறு

17. தன்மை அணி என்பது

(I) எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும் சொல்லால் தொடுப்பது

(II) பொருள்,குணம்,சாதி,.தொழிலொடு புலனாவது

(III) வினை,பயன்,மெய்,உரு நிலைகளில் வருவது

(IV) நேரின மணியை ஒத்தது

இவற்றுள்

(A) அனைத்தும் சரி (B) அனைத்தும் சரியன்று

(C) I, II சரி (D) III, IV சரி

18. பிரிவுகளுள் உயர்ந்தோர்க்கு

(I) ஓதலும் தூதும் உரிய

(II) பொருள்வயிற் பிரிதலும் உரியது

(III) மகடூஉவை உடன் அழைத்துச் செல்லும் கடல் பயணம் உரியது

(IV) பகைவயின் பிரிவும் உரியது

இவற்றுள்

(A) I, II சரி (B) அனைத்தும் சரி

(C) அனைத்தும் சரியல்ல (D) III, IV சரி

19. பழங்காலத்தில் நிகண்டுகள்

(I) இலக்கணக் கல்விக்கு முன்னர் கற்கப்பட்டன

(II) சொற்களின் பொருளைப் புரிந்து கொள்ளப் பயன்பட்டன

(III) அக்கால மொழிவளத்தைப் பறைசாற்றுவன

(IV) தனித்தமிழ்ச் சொற்களால் இயற்றப்பட்டன

இவற்றுள்

(A) I, II, III சரி (B) I, III, IV சரி

(C) I,II,IV சரி (D) அனைத்தும் சரி

**20.** பன்னிரு பாட்டியல்

(I) பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்டது

(II) பல்வேறு இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறும் தொகுப்பு நூல்

(III) பன்னிரு புலவர்கள் பற்றியும் பன்னிருவகைப் பொருத்தம் பற்றியும் கூறுகிறது

(IV) பன்னிரு படலத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டது

இவற்றுள்

(A) II, III,IV சரி (B) அனைத்தும் சரி

(C) அனைத்தும் சரியல்ல (D) I, II, III சரி

**21.** பரிதிமாற் கலைஞர்

(I) நாடகவியலின் ஆசிரியர்

(II) ரூபாவதி,கலாவதி,மானவிஜயம் முதலான நூல்களின் ஆசிரியர்

(III) தமிழ் மொழி வரலாறு எழுதியவர்

(IV) சமசுகிருத இலக்கிய வரலாறு எழுதியவர்

இவற்றுள்

(A) I, II, சரி (B) I, III, IV சரி

(C) I , II, III சரி (D) I, IV சரி

**22.** காசி விசுவநாத முதலியார்

(I) வேதசமாஜம், தத்துவ போதினி போன்ற இதழ்களை நடத்தியவர்

(II) முதன்முதலில் மேடையில் நடிக்கப் பெற்ற டம்பாச்சாரி விலாசம் என்ற சமூக நாடகத்தை எழுதியவர்

(III) ‘தாசில்தார்’ நாடகத்தை எழுதியவர்

(IV) பிரதாபச் சந்திரவிலாசம் எனும் நாடகத்தை அரங்கேற்றியவர்

இவற்றுள்

(A) I, II, IV சரி (B) I, IV சரி

(C) I, III, IV சரி (D) I, II, III சரி

**23.** நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை

(I) காந்தியக் கவிஞர் என்றழைக்கபடுபவர்

(II) ‘கத்தியின்றி ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகுது’ என்று பாடியவர்

(III) ‘மலரும் மாலையும்’ இயற்றியவர்

(IV) ‘அவனும் அவளும்’ என்ற கவிதை நூலை இயற்றியவர்

இவற்றுள்

(A) I,III.IV சரி (B) I, II, IV சரி

(C) I, III சரி (D) II, III, IV சரி

**24.** சவ்வாதுப் புலவர்

(I) சோமசுந்தர தேசிகரிடம் தமிழ் பயின்றவர்

(II) இரகுநாத சேதுபதியின் அவைக்களப்புலவர்

(III) நவீன அகத்தியர் எனப் போற்றப்பட்டவர்

(IV) நாகைக் கலம்பகம், பஞ்சரத்தினமாலை முதலான நூல்களை எழுதியவர்

இவற்றுள்

(A) I,II, III சரி  (B) I, III சரி

(C) I, II, IV சரி  (D) I, II, III, IV சரி

**25.** எச்.ஏ. கிருஷ்ண பிள்ளை

(I) கிறித்தவக் கம்பர் எனப் போற்றப்படுபவர்

(II) இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம் நூல்களை இயற்றியவர்

(III) திருவனந்தபுரம் மன்னர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்

(IV) வைணவராகப் பிறந்து 30-ஆவது வயதில் கிறித்தவராக மாறியவர்

இவற்றுள்

(A) I, II, III, IV சரி  (B) I, II, III சரி

(C) I, III, IV சரி  (D) அனைத்தும் சரியல்ல

**26.** கோபாலகிருஷ்ண பாரதி

(I) இந்துஸ்தானி இசையைக் கற்றவர்

(II) உ.வே.சா. அவர்களால் வாழ்க்கை வரலாறு எழுதப்பட்டவர்

(III) நந்தனார் சரித்திரக் கீர்த்தனை போன்ற கீர்த்தனை நூல்கள் பல இயற்றியவர்

(IV) காவடிச்சிந்து பாடுவதில் வல்லவர்

இவற்றுள்

(A) அனைத்தும் சரி  (B) I, II, III சரி

(C) I, III, IV சரி  (D) அனைத்தும் சரியன்று

**27.** தாயுமானவர்

(I) சமரச ஒளி கண்டவர்

(II) ‘எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே’ எனப் பாடியவர்

(III) இசை மெட்டோடு அமைந்த நாட்டுப்புறச் சாயலுடன் பாக்களைப் புனைந்தவர்

(IV) விநாயகப் புராணம்இயற்றியவர்

இவற்றுள்

(A) I, III, IV சரி  (B) I, IV, II சரி

(C) II, III, IV சரி  (D) I, II, III சரி

**28.** திராவிட மொழிகள்

(I) வடமொழிகளிலிருந்து வேறானவை

(II) இந்தியாவிற்கு வெளியிலும் வழங்குபவை

(III) எல்லீசு, கால்டுவெல் முதலானோரால் ஆராயப்பட்டவை

(IV) சிந்து சமவெளியில் வழங்கிய தொன்மொழியோடு நெருங்கிய தொடர்புடையவை

இவற்றுள்

(A) அனைத்தும் சரி

(B) அனைத்தும் சரியல்ல

(C) I, II,III சரி

(D) I, II, IV சரி

**29.** சிற்பக் கலையில்

(I) தமிழகம் தனித்தன்மை உடையது

(II) சிற்பரத்தினாகரம், சிற்பசிந்தாமணி முதலிய இலக்கண நூல்கள் உள

(III) அறிவியல் நெறி சார்ந்த அணுகுமுறை பின்பற்றப்பட்டது

(IV) மாமல்லபுரம் தனிச்சிறப்புடையது

இவற்றுள்

(A) I,II, III, சரி

(B) I, II, IV சரி

(C) II, III, IV சரி

(D) அனைத்தும் சரி

**30.** தொ.மு.சி.ரகுநாதன்

(I) இலக்கிய விமர்சனம் எழுதியவர்

(II) புதுமைப்பித்தன் வரலாற்றை எழுதியவர்

(III) ‘பஞ்சும் பசியும்’ படைத்தவர்

(IV) பாரதியும் ஷெல்லியும் என்ற நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்

இவற்றுள்

(A) I, II, III சரி

(B) I, II, IV சரி

(C) அனைத்தும் சரி

(D) அனைத்தும் சரியல்ல

**31.** <u>உறுதிக்கூற்று (உ)</u> : அவர் அனுமதிக்கப்படுவார் எனில் பிறர் அனுமதிக்கப்படார் என்பது போதரும்

<u>காரணம் (கா)</u> : எடுத்த மொழி இனம் செப்பலும் உரித்து

(A) (உ) சரி ; (கா) சரியன்று

(B) (உ) சரியன்று ; (கா) சரி

(C) இரண்டும் சரி

(D) இரண்டும் சரியல்ல

32. <u>**உறுதிக்கூற்று**</u> ***(உ)*** : குன்றம் என்பதில் இடம்பெறும் 'அம்' பகுதிப் பொருள் விகுதி
<u>**காரணம்**</u> ***(கா)*** : தன் பொருளை உணர்த்தாது தான் சார்ந்துவரும் சொல்லின் பொருளையே 'அம்' சுட்டி நிற்கிறது
(A) இரண்டும் சரி
(B) இரண்டும் சரியல்ல
(C) (உ) சரி ; (கா) சரியன்று
(D) (உ) சரியன்று (கா) சரி

33. <u>**உறுதிக்கூற்று**</u> ***(உ)*** : வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்று
<u>**காரணம்**</u> ***(கா)*** : வழக்கை உருவாக்குவதும் செயல்படுத்துவதும் உயர்ந்தோரே.
(A) (உ) சரி; (கா) சரியன்று
(B) (உ) சரியன்று; (கா) சரி
(C) இரண்டும் சரியல்ல
(D) இரண்டும் சரி

34. <u>**உறுதிக்கூற்று**</u> ***(உ)*** : ஐயர் யாத்தனர் கரணம்
<u>**காரணம்**</u> ***(கா)*** : பொய்யும் வழுவும் தோன்றின
(A) (உ) சரியன்று; (கா) சரி
(B) இரண்டும் சரி
(C) (உ) சரி ; (கா) சரியன்று
(D) இரண்டும் சரியல்ல

35. <u>**உறுதிக்கூற்று**</u> ***(உ)*** : ஐங்குறுநூறு என்பது அகப்பொருள் பற்றிய எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.
<u>**காரணம்**</u> ***(கா)*** : திணை ஒன்றுக்கு 100 பாடல்கள் வீதம் ஐந்திணைக்கும் குறுகிய அடிகளையுடைய பாடல்கள் ஐந்நூறு உடையது.
(A) இரண்டும் சரி
(B) (உ), சரி ; (கா) சரியன்று
(C) (உ) சரியன்று ; (கா) சரி
(D) இரண்டும் சரியல்ல

36. <u>**உறுதிக்கூற்று**</u> ***(உ)*** : கைந்நிலை என்பது ஓர் அகத்திணை இலக்கியம்
<u>**காரணம்**</u> ***(கா)*** : அது கைக்கிளையைப் பற்றிய 60 பாடல்களைக் கொண்டது.
(A) இரண்டும் சரி
(B) இரண்டும் சரியல்ல
(C) (உ) சரி ; (கா) சரியன்று
(D) (உ) சரியன்று ; (கா) சரி

37. **<u>உறுதிக்கூற்று</u>** ***(உ)*** : திண்ணப்பர் கண்ணப்பர் ஆனதைப் பெரியபுராணம் கூறுகிறது.

**<u>காரணம்</u>** ***(கா)*** : தம் கண்ணைப் பறித்துக் கண்ணில்லா ஒருவருக்குப் பொருத்தி உதவினார்

(A) *(உ) சரி ; (கா) சரியன்று*

(B) *(உ) சரியன்று ; (கா) சரி*

(C) *இரண்டும் சரி*

(D) *இரண்டும் சரியல்ல*

38. **<u>உறுதிக்கூற்று</u>** ***(உ)*** : கலம்பகவகை இலக்கியங்களுள் நந்திக் கலம்பகம் தனிச்சிறப்புடையது

**<u>காரணம்</u>** ***(கா)*** : நந்தி வர்மப் பல்லவன் இயற்றியதால் அந்நூல் அப்பெயர் பெற்றது.

(A) *இரண்டும் சரி*

(B) *(உ) சரி ; (கா) சரியன்று*

(C) *(உ) சரியன்று ; (கா) சரி*

(D) *இரண்டும் சரியல்ல*

39. **<u>உறுதிக்கூற்று</u>** ***(உ)*** : படிக்காசுப் புலவர் எனப் பெயரிய புலவர் இருந்தார்.

**<u>காரணம்</u>** ***(கா)*** : படியிலே காசுகள் விழும்போது பல்வேறு ஒலிகள் எழுவதுபோல் சந்த ஒலி மிக்க பாடல்களை அவர் பாடியதால் அவ்வாறு அழைக்கப்பட்டார்

(A) *இரண்டும் சரி*

(B) *(உ) சரியன்று; (கா) சரி*

(C) *இரண்டும் சரியல்ல*

(D) *(உ) சரி ; (கா) சரியன்று*

40. **<u>உறுதிக்கூற்று</u>** ***(உ)*** : நவீன தமிழ் உரைநடையின் முன்னோடிகளில் ஒருவராகப் புகழப்படுபவர் தத்துவ போதகர்

**<u>காரணம்</u>** ***(கா)*** : பேச்சுத் தமிழை ஒட்டி மிகுதியான உரைநடை நூல்களைப் படைத்தவர் அவர்.

(A) *(உ) சரி ; (கா) சரியன்று*

(B) *(உ) சரியன்று; (கா) சரி*

(C) *இரண்டும் சரி*

(D) *இரண்டும் சரியல்ல*

41. <u>உறுதிக்கூற்று</u> *(உ)* : விடுகதைக்கு அழிப்பாங்கதை என்ற பெயருண்டு.

<u>காரணம்</u> *(கா)* : விடுகதை சிக்கலையும் புதிரையும் ஏற்படுத்துகிறது.

(A) (உ) சரி ; (கா) சரியன்று
(B) (உ) சரியன்று ; (கா) சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் சரியல்ல

42. <u>உறுதிக்கூற்று</u> *(உ)* : இந்திய ஊடகங்களுக்குக் கருத்துச் சுதந்திரம் முழுமையாக உள்ளது.

<u>காரணம்</u> *(கா)* : அரசியலமைப்புச் சட்டத்தில் தனியே அதற்கான சட்டப் பிரிவு உள்ளது.

(A) இரண்டும் சரி
(B) (உ) சரி ; (கா) சரியன்று
(C) (உ) சரியன்று ; (கா) சரி
(D) இரண்டும் சரியல்ல

43. <u>உறுதிக்கூற்று</u> *(உ)* : சங்க இலக்கியத்திற்கு முற்பட்டது தொல்காப்பியம்.

<u>காரணம்</u> *(கா)* : சகரக்கிளவி அ,ஐ,ஔ தவிர்ந்த உயிர்களுடன் பயின்று வரவில்லை.

(A) இரண்டும் சரியல்ல
(B) (உ) சரியன்று ; (கா) சரி
(C) (உ) சரி ; (கா) சரியன்று
(D) இரண்டும் சரி

44. <u>உறுதிக்கூற்று</u> *(உ)* : சேரமான் கனைக்காலிரும் பொறை நீர் வேட்கையைத் தணிக்க, நீர் கேட்க, அது தாமதமாகத் தரப்பட்டதால் குடிக்க மறுத்து உயிர் நீத்தான்.

<u>காரணம்</u> *(கா)* : அவன் மாபெரும் முன்கோபி

(A) (உ) சரி ; (கா) சரியன்று
(B) (உ) , சரியன்று ; (கா) சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் சரியல்ல

45. **<u>உறுதிக்கூற்று</u> (உ)** : அச்சமும் நாணமும் இல்லாத பெண்கள் அழகிய தமிழ் நாட்டின் கண்கள் என்கிறார் பாரதிதாசன்.

**<u>காரணம்</u> (கா)** : பண்டைத் தமிழ் மரபைப் பிற்காலக் கவிஞர்கள் போற்றி வருகின்றனர்.

(A) இரண்டும் சரியல்ல

(B) *(உ) , சரி ; (கா) சரியன்று*

(C) *(உ) சரியன்று ; (கா) சரி*

(D) இரண்டும் சரி

46. **<u>உறுதிக்கூற்று</u> (உ)** : இலக்கியம் சமூகவியலுக்கோ அரசியலுக்கோ மாற்றாக அமைவதன்று.

**<u>காரணம்</u> (கா)** : அதற்குரிய நியதியும் நோக்கமும் தனியானவை

(A) *(உ) சரி ; (கா) சரியன்று*

(B) *(உ) , சரியன்று ; (கா) சரி*

(C) இரண்டும் சரி

(D) இரண்டும் சரியல்ல

47. **<u>உறுதிக்கூற்று</u> (உ)** : 'பொன்னொடு வந்து கறியொடு பெயர்ந்தனர்' எனப் பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

**<u>காரணம்</u> (கா)** : தமிழகத்திற்கு அயல்நாட்டிலிருந்து வந்து வணிகம் செய்தனர்

(A) *(உ) சரி ; (கா) சரியன்று*

(B) *(உ) , சரியன்று ; (கா) சரி*

(C) இரண்டும் சரி

(D) இரண்டும் சரியல்ல

48. **<u>உறுதிக்கூற்று</u> (உ)** : பரத்தையரைத் தொல்காப்பியர் காமக்கிழத்தியர் என்கிறார்.

**<u>காரணம்</u> (கா)** : கடனறியும் வாழ்க்கை உடையராகிக் காமக்கிழமை பூண்டு இல்லறம் நிகழ்த்தினர் பரத்தையர்

(A) *(உ) சரி ; (கா) சரியன்று*

(B) *(உ) சரியன்று ; (கா) சரி*

(C) இரண்டும் சரியல்ல

(D) இரண்டும் சரி

**49.** <u>*நிரல் படுத்துக.*</u>

உத்தமத் தோற்கருவி

(A) *மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லி*

(B) *மத்தளம், இடக்கை, தண்ணுமை, சல்லி*

(C) *மத்தளம், சல்லி, இடக்கை, தண்ணுமை*

(D) *மத்தளம், தண்ணுமை, சல்லி, இடக்கை*

**50.** <u>*நிரல் படுத்துக.*</u>

மானுடக் குணம்

(A) *ஞானம், ஐசுவரியம், கன்மம், வைராக்கியம்*

(B) *ஞானம், கன்மம், ஐசுவரியம், வைராக்கியம்*

(C) *ஞானம், கன்மம், வைராக்கியம், ஐசுவரியம்*

(D) *ஞானம், வைராக்கியம், கன்மம், ஐசுவரியம்*

**51.** <u>*நிரல் படுத்துக.*</u>

அழுகைக்குரிய நிலைக்களன்

(A) இளிவு, அசைவு, இழவு, வறுமை

(B) இளிவு, இழவு, வறுமை, அசைவு

(C) இளிவு, வறுமை, இழவு, அசைவு

(D) இளிவு, இழவு, அசைவு, வறுமை

**52.** <u>*நிரல் படுத்துக.*</u>

மெய் உவம உருபுகள்

(A) கடுப்ப, ஏய்ப்ப, மருள, புரைய

(B) கடுப்ப, மருள, ஏய்ப்ப, புரைய

(C) கடுப்ப, புரைய, ஏய்ப்ப, மருள

(D) கடுப்ப, ஏய்ப்ப, புரைய, மருள

**53.** <u>*நிரல் படுத்துக.*</u>

அசை வகை

(A) குறில், நெடில், குறில்நெடில், குறிலிணை, ஒற்றொடு வருதல்

(B) குறில், குறில்நெடில்,நெடில்,குறிலிணை, ஒற்றொடு வருதல்

(C) குறில், நெடில், குறிலிணை, குறில் நெடில், ஒற்றொடு வருதல்

(D) குறில், நெடில், ஒற்றொடு வருதல், குறிலிணை, குறில் நெடில்

**54.** <u>நிரல் படுத்துக.</u>

பரிபாடலின் உறுப்பு

(A) கொச்சகம், சுரிதகம், அராகம், எருத்து

(B) கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து

(C) கொச்சகம், சுரிதகம், எருத்து, அராகம்

(D) கொச்சகம், எருத்து, சுரிதகம், அராகம்

**55.** <u>நிரல் படுத்துக.</u>

நூலின் நால்வகை மரபு

(A) சூத்திரம், படலம், ஓத்து, பிண்டம்

(B) சூத்திரம், பிண்டம், படலம், ஓத்து

(C) சூத்திரம், ஓத்து, பிண்டம், படலம்

(D) சூத்திரம், ஓத்து, படலம், பிண்டம்

**56.** <u>நிரல் படுத்துக.</u>

குட்டிக்குரியவை

(A) மூங்கா, வெருகு, எலி, அணில்

(B) மூங்கா, எலி, வெருகு, அணில்

(C) மூங்கா, அணில், எலி, வெருகு

(D) மூங்கா, அணில், வெருகு, எலி

**57.** <u>நிரல் படுத்துக.</u>

காலவரிசையில் பாட்டியல் நூல்கள்

(A) வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், வரையறுத்த பாட்டியல், சிதம்பரப்பாட்டியல்

(B) வெண்பாப்பாட்டியல், வரையறுத்தபாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல்

(C) வெண்பாப்பாட்டியல், வரையறுத்த பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், நவநீதப்பாட்டியல்

(D) வெண்பாப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், வரையறுத்த பாட்டியல், நவநீதப்பாட்டியல்

**58.** <u>நிரல் படுத்துக.</u>

விளி ஏற்கும் உயர்திணைப் பெயர்களின் ஈறுகள்

(A) இ, ஐ, உ, ஓ

(B) இ, ஐ, ஓ, உ

(C) இ, உ, ஐ, ஓ

(D) இ, ஓ, உ, ஐ

**59.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | வேற்றுமைத்தொகை | (1) | கடிநாய் |
| (b) | உவமைத்தொகை | (2) | காய்கறி |
| (c) | வினைத்தொகை | (3) | மரவேலி |
| (d) | உம்மைத்தொகை | (4) | மரைக்கண் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (3) | (1) | (4) | (2) |
| (C) | (3) | (2) | (1) | (4) |
| (D) | (3) | (1) | (2) | (4) |

**60.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | செந்தாமரை | (1) | அளவு |
| (b) | தீங்கரும்பு | (2) | வடிவு |
| (c) | வட்டப்பலகை | (3) | சுவை |
| (d) | நெடுங்கோல் | (4) | வண்ணம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (3) | (1) |
| (B) | (4) | (2) | (1) | (3) |
| (C) | (4) | (3) | (2) | (1) |
| (D) | (4) | (1) | (2) | (3) |

**61.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | முன்மொழிநிலையல் | (1) | பொற்றொடி வந்தாள் |
| (b) | பின்மொழிநிலையல் | (2) | இராப்பகல் |
| (c) | இருமொழி நிலையல் | (3) | சுடுநீர் |
| (d) | அன்மொழிநிலையல் | (4) | முல்லை சூடினாள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (2) | (4) | (1) |
| (B) | (3) | (4) | (2) | (1) |
| (C) | (3) | (2) | (1) | (4) |
| (D) | (3) | (4) | (1) | (2) |

**62.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | உருவகம் | (1) | குறிப்பு |
| (b) | தீவகம் | (2) | பொருள் |
| (c) | விரோதம் | (3) | மாலை |
| (d) | நுட்பம் | (4) | ஏது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (3) | (2) |
| (B) | (4) | (2) | (3) | (1) |
| (C) | (4) | (2) | (1) | (3) |
| (D) | (4) | (3) | (2) | (1) |

**63.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | கந்தர் அந்தாதி | (1) | குமரகுருபரர் |
| (b) | திருவெங்கைக்கோவை | (2) | புகழேந்திப்புலவர் |
| (c) | நான்மணிமாலை | (3) | அருணகிரியார் |
| (d) | செஞ்சிக்கலம்பகம் | (4) | சிவப்பிரகாச சுவாமிகள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (4) | (1) | (2) |
| (B) | (3) | (1) | (4) | (2) |
| (C) | (3) | (4) | (2) | (1) |
| (D) | (3) | (2) | (4) | (1) |

**64.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | மழை | (1) | ராஜசேகரன் |
| (b) | நாற்காலிக்காரர் | (2) | அண்ணா |
| (c) | வேலைக்காரி | (3) | ந.முத்துச்சாமி |
| (d) | வயிறு | (4) | இந்திரா பார்த்தசாரதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (3) | (1) |
| (B) | (4) | (3) | (2) | (1) |
| (C) | (4) | (2) | (1) | (3) |
| (D) | (4) | (3) | (1) | (2) |

**65.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | இராசராச சோழன் உலா | (1) | வீரமாமுனிவர் |
| (b) | அடைக்கல நாயகி உலா | (2) | வேதநாயக சாஸ்திரியார் |
| (c) | ஞான உலா | (3) | காளமேகப்புலவர் |
| (d) | திருவானைக்கா உலா | (4) | ஒட்டக்கூத்தர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (1) | (3) |
| (B) | (4) | (3) | (1) | (2) |
| (C) | (4) | (1) | (2) | (3) |
| (D) | (4) | (3) | (2) | (1) |

**66.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | அருணாசலக் கவிராயர் | (1) | நந்தனார் சரித்திரக் கீர்த்தனை |
| (b) | மாயூரம் வேதநாயகம் பிள்ளை | (2) | திருவிளையாடல் கீர்த்தனை |
| (c) | கோபாலகிருஷ்ண பாரதியார் | (3) | சர்வசமய சமரசக் கீர்த்தனைகள் |
| (d) | திருநயம் அப்பாவையார் | (4) | இராம நாடகக் கீர்த்தனை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (3) | (2) |
| (B) | (4) | (2) | (3) | (1) |
| (C) | (4) | (1) | (2) | (3) |
| (D) | (4) | (3) | (2) | (3) |

**67.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | அமுதவல்லி | (1) | சஞ்சீவிபர்வதத்தின் சாரல் |
| (b) | வஞ்சி | (2) | புரட்சிக்கவி |
| (c) | அன்னம் | (3) | குறிஞ்சித் திட்டு |
| (d) | தாமரை | (4) | பாண்டியன் பரிசு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (2) | (1) | (4) | (3) |
| (B) | (2) | (4) | (1) | (3) |
| (C) | (2) | (4) | (3) | (1) |
| (D) | (2) | (3) | (4) | (1) |

**68.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | அம்மாக்கண்ணுப்பாட்டு | (1) | பாரதிதாசன் |
| (b) | இராட்டினப் பாட்டு | (2) | சுத்தானந்த பாரதியார் |
| (c) | உலகப் பன்பாட்டு | (3) | இராமலிங்கம் பிள்ளை |
| (d) | சக்திப் பாட்டு | (4) | பாரதியார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (3) | (2) |
| (B) | (4) | (3) | (1) | (2) |
| (C) | (4) | (1) | (2) | (3) |
| (D) | (4) | (2) | (1) | (3) |

**69.** *பொருத்துக:*

(a) உல்கு (1) ஊடுபயிர்வரி

(b) ஈழம் பூட்சி (2) நெசவு வரி

(c) ஊடுபோக்கு (3) கள்வரி

(d) தறிக் கூறை (4) சுங்கம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (1) | (3) | (2) |
| (B) | (4) | (2) | (3) | (1) |
| (C) | (4) | (3) | (1) | (2) |
| (D) | (4) | (1) | (2) | (3) |

**70.** *பொருத்துக:*

(a) பார்ப்பனர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலம் (1) சொர்னதானம்

(b) இந்துக் கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலம் (2) பள்ளிச்சந்தம்

(c) சமண,பௌத்தக்கோயில்களுக்கும் மடங்களுக்கும் வழங்கப்பட்ட நிலம் (3) தேவபோகம்

(d) பொன்னைக் கொடையாக அளித்தல் (4) பிரமதேயம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (4) | (2) | (1) | (3) |
| (B) | (4) | (1) | (2) | (3) |
| (C) | (4) | (3) | (1) | (2) |
| (D) | (4) | (3) | (2) | (1) |

**71-75 :**

பின்வரும் பகுதியைப் படித்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைத் தருக.**(71 – 75)**

தமிழ் மொழி கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்தே சிறப்புமிக்க இலக்கிய இலக்கணப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பெற்றுத் திகழ்கின்றது. பண்டைத் தமிழர்கள் அல்லது திராவிடர்களின் நாகரிகம் பழைய எகிப்திய, சுமேரிய, சிந்து சமவெளி நாகரிகக் காலங்களை ஒட்டித் தொடங்கி உள்ளது எனலாம். இக்காலத்தில் பேச்சு வழக்கில் இருக்கின்ற உலக மொழிகளில் மிகவும் தொன்மையான மொழி தமிழ் என்பதில் ஐயம் இல்லை. திரைகடல் ஓடியும் திரவியம் தேடும் இயல்பினைக் கொண்ட தமிழ்மக்கள் பல நாடுகளுக்கும் தொன்றுதொட்டே சென்று வந்ததன் விளைவாக இவர்தம் பண்பாட்டுக் கூறுகளைப் பர்மா, இலங்கை, தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும், ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா முதலான நாடுகளிலும் காணமுடிகிறது.

உலகின் பல்வேறு மொழிக்குடும்பங்களோடு உறவு கொண்டுள்ள 25க்கு மேற்பட்ட திராவிட மொழிகள் இந்திய நாடு முழுவதிலும் உள்ளன. திராவிட மொழிகளில் தலையான ஒன்றாகத் தமிழ்மொழி அமைந்துள்ளது. இன்று வழக்கில் உள்ள திராவிட மொழிகளின் சொற்களை எல்லாம் அவற்றின் தொன்மையான வடிவங்களுக்கு மீட்டுருவாக்கம் செய்யும் பொழுது பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்ற சொற்கள் அவற்றில் அமைந்திருப்பதைக் காணலாம். இந்நிலையில் இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்குப் பிரதிநிதியாக சமஸ்கிருத மொழி திகழ்வதைப் போன்று திராவிட மொழிகளின் பிரதிநிதியாகத் தமிழ்மொழி திகழ்கின்றது என்று துணியலாம்.

தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியக் கோட்பாடுகளையும் செவ்வியல் நிலைக்குத் தரப்படுத்தும் முயற்சி 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கியது. தொல்காப்பியம் குறிப்பிடும் கவிதை மரபுகளும் இலக்கியக் கோட்பாடுகளும் இந்த முயற்சிகளின் மணிமுடிகளாக அமைகின்றன. மொழியில் இடம் பெறும் ஒலியன்கள், பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும் முறை போன்றன பற்றியும் விதிகளை இந்தப் பழம் பெருந்தமிழ் இலக்கணம் பாங்குற எடுத்தியம்புகின்றது. இவ்வாறு தரப்படுத்தப்பட்ட செவ்வியல் மொழியைச் செந்தமிழ் என்று பழந்தமிழர் குறிப்பிட்டுள்ளனர். வட இந்திய மொழிகளில் தரப்படுத்தப்பட்ட வடிவத்திற்கு அம்மொழிகளின் அறிஞர்கள் சமஸ்கிருதம் என்னும் பெயரைத் தந்ததைப் போன்றே பழம் தமிழர்களும் செவ்வியல் நிலைக்குத் தரப்படுத்தப்பட்ட தமிழ்மொழியைச் செந்தமிழ் என்று குறிப்பிடுகின்றனர். இம்முயற்சி கிரோக்கர்களோடு தமிழர்கள் தொடர்பு கொள்வதங்கு முன்னரே ஏற்பட்டுள்ளது என்று கில்பர்ட் ஸ்லேட்டர் (Gilbert Slater) என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மொழி கிரேக்கத்தை விடவும் பண்பட்டது எனவும் இலத்தீன் மொழியை விட அழகானது என்றும் ஆங்கிலம், ஜெர்மன் ஆகிய மொழிகளை விட ஆற்றல் மிக்கது என்றும் வின்ஸ்லோ(Winslow) என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

செவ்வியல் மொழியான தமிழ் மொழியின் சங்ககாலப் படைப்புகள் கிரேக்க மொழியின் தேர்ந்து எடுக்கப்பட்ட தன்னுணர்ச்சிக் கவிதைகளோடு ஒப்பிடும் தகுதியை உடையன என்பதும் உலகின் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கிய வரிசையில் அவை வைத்துப் பாராட்டத் தக்கன என்றும் பியரி மெய்லி(Pierri Meilli) என்ற பிரெஞ்சு நாட்டு இந்தியவியல் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

**71.** இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பப் பிரதிநிதியாக விளங்குவது

(A) தமிழ் (B) சமஸ்கிருதம்

(C) சப்பானிய மொழி (D) சீனம்

**72.** பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும் விதியைக் கூறும் பழமையான நூல்

(A) இறையனார் களவியல் (B) இலக்கண விளக்கம்

(C) தொன்னூல் விளக்கம் (D) தொல்காப்பியம்

**73.** *உறுதிக்கூற்று* (உ) : தமிழர்களின் புலம் பெயர்வால் பண்பாட்டுப் பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது.

*காரணம்* (கா) : திரவியம் தேடத் திரைகடல் ஓடியவர்கள் தமிழர்கள்

(A) (உ) சரியன்று ; (கா) சரி

(B) (உ) , சரி ; (கா) சரியன்று

(C) (உ), (கா) இரண்டும் சரியல்ல

(D) (உ), (கா) இரண்டும் சரி

**74.** தமிழ் மொழி

(I) இலக்கிய இலக்கண வளம் மிக்கது

(II) பண்பாட்டுப் பாரம்பரியம் உடையது

(III) தொடர்ந்து வரும் இலக்கிய மரபு கொண்டது

(IV) பிறமொழிச் சொற்கள் இல்லாதது

இவற்றுள்

(A) I,II, IV சரி (B) I, III, IV சரி

(C) I, II, III சரி (D) II, IV சரி

**75.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | தன்னுணர்ச்சிக் கவிதைகளை ஒப்பிட்டவர் | (1) | கில்பர்ட் ஸ்லேட்டர் |
| (b) | உலக மொழிகளை ஆராய்ந்தவர் | (2) | தொல்காப்பியர் |
| (c) | கவிதை மரபைக் கூறுபவர் | (3) | பியரிமெய்லி |
| (d) | செவ்வியல் மொழி அறிஞர் | (4) | வின்ஸ்லோ |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | (3) | (2) | (4) | (1) |
| (B) | (3) | (2) | (1) | (4) |
| (C) | (3) | (4) | (1) | (2) |
| (D) | (3) | (4) | (2) | (1) |

**Space For Rough Work**